6. திரு. அ.செ. வில்வநாதன்

7. திரு. கி. அசோக்குமார்

8. திரு. T.K. அமுல் கந்தசாமி

9. திருமதி கு. சித்ரா

10. திரு. K.A. பாண்டியன்

11. திரு. துரை. சந்திசேகர்

பேரவை விதி 268 (ii)-ன்படி, டாக்டர் இரா. இலட்சுமணன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

12. பேரவைக் குழுக்கள், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வாழ்த்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் முடிந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் நியமனக் குழுக்களுக்கு நியமனம் செய்யப்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் ஆகியோரது பெயர்களைத் தாங்கள் தற்போது அறிவித்தீர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமனம் செய்யப்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

10. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி 26-6-2024 அன்று நிறைவேற்றப்பெற்ற தீர்மானம்-கூட்டத் தொடர் என்பதற்குப் பதில் கூட்டம் என மாற்றி கால அவகாசத்தைக் குறைத்தல்

மாண்புமிகு திரு. துரைமுருகன்: கடந்த 26–6–2024 அன்று பேரவையில் விதிகளுக்கு மாறாக, தொடர்ந்து கோஷமிட்டுக்

கொண்டிருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களை இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் பேரவைப் பணிகளிலிருந்து நீக்கி வைக்கும் தீர்மானம் முன்மொழியப்பெற்று பேரவையால் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருத்தினை ஏற்று, "'கூட்டத்தொடர்' என்பதைக் 'கூட்டம்' என மாற்றிக்கொள்ளலாம்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உள்ள 'கூட்டத்தொடர்' என்பது 'கூட்டம்' என மாற்றிக்கொள்ளப்படுகிறது.

13. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதினாறாவது சட்டமன்றப் பேரவையின் ஆறாம் கூட்டத்தொடரின் முதல் கூட்டம் 12-2-2024 அன்று தொடங்கி 22-2-2024 வரையிலும் மற்றும் இரண்டாம் கூட்டம் 20-6-2024 முதல் (இன்று) 29-6-2024 வரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இக்கூட்டத் தொடர்களில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பின்வருமாறு:

பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)	--	17 நாட்கள்
மாலையிலும் பேரவை கூடிய நாட்கள்	--	8 நாட்கள் (21-2-2024, 21-6-2024, 22-6-2024, 24-6-2024,